## சேலத்தில் கஞ்சித் தொட்டி திறப்பு

# செருப்புத் தைக்கும் தொழில் நசிவடைந்ததால் சாப்பாட்டுக்கு வழியில்லை என புகார்

சேலம், ஜன.26: சேலம் குகை ஆண்டிப்பட்டி ஏரி பகுதியில் குடியரசு தினமான செவ்வாய்க்கிழமை தொழிலாளர்கள் கஞ்சித் தொட்டி திறந்து பொதுமக்களுக்கு கஞ்சி ஊற்றினார்கள்.

வறட்சி, பஞ்சம் நேரிடும் காலங்களில் பொதுமக்கள் உயிர் பிழைப்பதற்காக கஞ்சித் தொட்டி திறக்கப்பட்டு மக்களுக்கு இலவசமாக கஞ்சி உணவு வழங்கப்படும். இந்நிலையில் சேலத்தில் கஞ்சித் தொட்டி திறக்கப்பட்டது மாவட்ட நிர்வாகத்தை அதிர்ச்சிக்குள்ளாக்கி உள்ளது.

சேலத்தில் குகை ஆண்டிப் பட்டி ஏரி, அம்பேத்கர் தெரு, [illegible]கில் நகர் ஆகிய பகுதிகளில் சுமார் ஆயிரம் குடும்பங்களைச் சேர்ந்த 3 ஆயிரத்துக்கும் அதிகமானோர் செருப்புத் தயாரிக்கும் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். கடைகளில் ஒட்டுமொத்தமாக தோல், ரெக்சின் போன்ற மூலப் பொருள்களை வாங்கி வந்து வீடுகளில் வைத்து புதிய செருப்புகளை தயாரிக்கின்றனர். இவற்றை சேலம் மற்றும் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் உள்ள செருப்புக் கடைகளுக்கு மொத்தமாகவும், சில்லரையாகவும் விற்பனை செய்து வருகின்றனர். நாளொன்றுக்கு ஒரு தொழிலாளி சுமார் 10 முதல் 30 செருப்புகள் வரை தயாரிக்க முடிகிறது. இதற்கு ஒரு ஜோடிக்கு மிக சொற்பமாக ரூ.5 மட்டுமே கூலியாக கிடைத்து வந்ததாக கூறப்படுகிறது.

### எந்திரங்களால் வீழ்ச்சி

விலைவாசி உயர்ந்துள்ள நிலையில் ஜீவனம் நடத்த இந்த வருமானம் போதவில்லை என்பதால் பல தொழிலாளர்கள் வட மாநி[illegible]களுக்கு செருப்பு தைக்கும் தொழிலுக்காக செல்லத் தொடங்கியுள்ளனர். மேலும் எந்திரங்கள் மூலம் அதிகளவில் செருப்புகள் தயாரிக்கப்படுவதால் கைத் தொழில் மூலம் தயாரிக்கப்படும் செருப்புகள் வீழ்ச்சி அடைந்துவிட்டதாகக் கூறப்படுகிறது.

தொழில் நலிவடைந்து தொழிலாளர்கள் வாடும் நிலையிலும் அரசு நிர்வாகம் மனு கொடுத்தும் கண்டுகொள்ளவில்லையே என்ற ஏக்கத்தில் இருந்த அம்பேத்கர் பகுதி பொதுமக்கள், குடியரசு தினமான செவ்வாய்க்கிழமை காலை வீடுகள்தோறும் தானியங்களை சேகரித்து தெருவில் வைத்து கஞ்சி தயாரித்து பொதுமக்களுக்கு விநியோகம் செய்யத் தொடங்கினர். இதை கேள்விப்பட்டு நூற்றுக்கணக்கான அப்பகுதி பொதுமக்கள், சிறுவர்-சிறுமியர் பாத்திரங்களில் கஞ்சியைப் பெற்றுச் சென்று பசியாறினர்.

இதுகுறித்து செருப்பு தைக்கும் தொழிலாளர் நல பேரவை அமைப்பாளர் கோவிந்தசாமி (52) கூறியது: இப்பகுதியில் தமிழகத்திலேயே மிக அதிகமான அளவுக்கு செருப்பு தயாரிக்கும் தொழிலாளர்கள் உள்ளனர். நாங்கள் தொன்று தொட்டு இந்த தொழிலில் ஈடுபட்டு வருகிறோம். எங்களுக்கு வேறு தொழில்கள் கிடையாது. அருந்ததியர் இனத்தைச் சேர்ந்தவர்கள் என்பதால் சொந்தமாக செருப்புக் கடை வைத்தாலும் யாரும் வியாபாரம் செய்வது கிடையாது. இப்பகுதியில் நாளொன்றுக்கு ஆயிரம் ஜோடி செருப்புகள் தயாரிக்கப்படுகின்றன. இவற்றுக்கு இப்போது நல்ல விலை கிடையாது என்பதால் அவற்றை அடிமாட்டு விலைக்குதான் வியாபாரிகளிடம் விற்பனை செய்கிறோம். அனைவரும் வட்டிக்கு கடன் வாங்கித்தான் மூலப் பொருள்களை வாங்கி செருப்பு தயாரிக்கிறோம். இந்நிலையில் மூலப் பொருள்களின் விலை பல மடங்கு உயர்ந்துள்ளது. செருப்பின் விலையும் உயர்ந்துவிட்டது. ஆனால் எங்களுக்கு கூலி மட்டும் உயரவில்லை.



சேலம் குகை அம்பேத்கர் தெருவில் கஞ்சித் தொட்டி திறந்து பொதுமக்களுக்கு செவ்வாய்க்கிழமை விநியோகம் செய்தனர்.

### இலவச காலணி திட்டம்

தொழில் நலிவடைந்துவிட்டதால் எங்களுக்கு சாப்பாட்டுக்கே வழியில்லாமல் கஷ்டப்படுகிறோம். இதன் காரணமாக எங்கள் குழந்தைகளை பள்ளி, கல்லூரிக்கு அனுப்ப முடியாமல் அவர்களையும் இதே தொழிலில் ஈடுபடுத்தி வருகிறோம். பட்டப் படிப்பு முடித்த இளைஞர்கள் கூட இங்கு செருப்புதான் தைக்கின்றனர்.

தமிழகத்தில் கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்பு வரை பள்ளிக்கூட மாணவர்களுக்கு இலவச காலணி வழங்கும் திட்டம் நடைமுறையில் இருந்தது. இத்திட்டத்தை மீண்டும் நடைமுறைக்கு கொண்டு வந்து எங்களிடம் செருப்புகளை கொள்முதல் செய்தால் எங்களுக்கு மிகவும் பயனுடையதாக இருக்கும். கலர் டி.வி., மனைப்பட்டா, சீருடை, வேஷ்டி - சேலை, சத்துணவு முட்டை போன்றவற்றை இலவசமாக வழங்கும் அரசு, மாணவர்களுக்கு காலணியையும் இலவசமாக வழங்கினால் எங்கள் வாழ்வாதாரம் காப்பாற்றப்படும். உடனடியாக எங்களைக் காப்பாற்ற அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லாவிட்டால் போராட்டம் தொடரும் என்றார் அவர்.

ஆண்டிப்பட்டி ஏரி பகுதி பெண்கள் கூறியது: செருப்பு தைக்கும் தொழிலில் நஷ்டம் ஏற்படுவதால் கடன் வாங்கியிருந்த நாங்கள் அதை திருப்பிச் செலுத்த முடியாமல் நிரந்தர கடனாளிகள் ஆகியுள்ளோம். நலவாரியத்தில் உறுப்பினர்களாக இருந்தும் அதனால் எந்தவித பயனும் இதுவரை கிடைக்கவில்லை. கைத்தறி துணிகளை தயாரிப்பவர்களிடம் இருந்து அரசே கொள்முதல் செய்து கோ-ஆப்டெக்ஸ் நிறுவனங்கள் மூலம் விற்பனை செய்கிறது. இதைப் போலவே எங்களது காலணியையும் அரசாங்கமே கொள்முதல் செய்து உற்பத்திக்கான விலையைக் கொடுக்க வேண்டும். அவற்றை அரசாங்கமே கோ-ஆப்டெக்ஸ் மூலம் விற்பனை செய்ய ஏற்பாடு செய்ய வேண்டும்.

தொழில் நலிவடைந்ததால் மார்க்கெட்டுகளில் ஒதுக்கப்படும் காய்கறிகளை வாங்கி வந்து கழுவி சாப்பிடும் அவல நிலையில் உள்ளோம். ஒரு ரூபாய் அரிசியைத்தான் வாங்கி உபயோகிக்கிறோம். வருமானம் இல்லாததால் குழந்தைகளை படிக்க வைக்க முடியவில்லை. அவர்களையும் எங்கள் தொழிலுக்கே பயன்படுத்திக் கொள்கிறோம்.

### தனி குடிநீர் குழாய் தேவை

ஆண்டிப்பட்டி ஏரி வீட்டு வசதி திட்டத்தில் ஆயிரக்கணக்கானோர் மாத வாடகைக்கு குடியிருந்து வருகிறோம். ஆனால் குடிநீருக்கு என்று தனியாக குழாய் அமைத்துக் கொடுக்கவில்லை. பொது குழாயில் நாங்கள் குடிநீர் பிடித்தால், அருகில் குடியிருக்கும் உயர் சாதியினர் எங்கள் கண் முன்பே குழாயைக் கழுவிவிட்ட பின்னரே தண்ணீர் பிடிக்கின்றனர். இதனால் எங்களுக்கு மிகுந்த அவமானமாக உள்ளது.

அரசாங்கமே சுய தொழில் செய்வதை ஊக்குவிக்கும் விதமாக கடன் உதவிகள் வழங்கி வருகிறது. ஆனால் நாங்கள் செய்யும் சுய தொழில் இழிநிலையில் உள்ளதை கண்டுகொள்ள மறுப்பது வேதனை அளிக்கிறது என்றனர்.